ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,921 — 1970 අගෝස්තු 28 වැනි සිකුරාදා — 1970.8.28

14,921 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஒகத்து மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 261 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | — | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

கட்டளை

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவ பலங்களை அனுசரித்து அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டார நாயக்க ஆகிய நான், சொல்லப்பட்ட 47 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு பொலநறுவை மாவட்டத்திலுள்ள மெதப்பற்று வடக்கு கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு ஏற்புடையதாகாது என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

எப். ஆர். டீ. பண்டாரநாயக்கா,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 10 ந் டீ.

8–1044—28.8 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,921

---

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், காலி மாவட்டத்திலுள்ள வட்டப் பொலக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை, அந்தப் பிரதேசத்தில் அப்பிரிவின் கீழ் காணிவரியொன்றை விதித்து அறவிடுவதற்கு இந்த அறிவித்தல் வாயிலாக அக்கிராமச் சபைக்கு அதிகாரமளிக்கிறேன்.

எப். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 17 ந் டீ.

8–1051—28.8.70 ந் திகதிய வர்த்தமானி இல.14,921

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் டீ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

## களியாட்டவரிக் கட்டளைச் சட்டம்

(267 ம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் காலி மாவட்டத்திலுள்ள நெலுவைக் கிராமச் சபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால், அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

சபையின் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக்கட்டணங்கள்மீது (267 ம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் இத்தீர்மானம் கசெற்றிற் பிரசுரிக்கப்படும் தேதியிலிருந்து இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின் படியான ஒரு வரியை இச்சபை இத்தால் விதித்து அறிவிடுகின்றது.

### கட்டணத்தொகை

| | வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம் :— | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|---|
| அ. | 20 சதத்துக்குக் குறையாமலும் ஆனால் 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 05 |
| ஆ. | 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 75 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 10 |
| இ. | 75 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 10 |
| ஈ. | 1.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1.50 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | .15 |
| உ. | 1.50 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 2.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 20 |
| ஊ. | 2.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 3.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 30 |
| எ. | 3.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 4.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 40 |
| ஏ. | 4.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 5.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 50 |
| ஐ. | 5 00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 10.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 1.00 |
| | 10.00 ரூபாவுக்கு மேற்படுமிடத்து மேலதிகமான ஒவ்வொரு 5 ரூபாவுக்கு அல்லது அதன் பகுதிக்கு கொடுப்பனவில் பத்துசதவீதம் | |

பீ. சிறீவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 7 ந உ.

8–1050—28.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,921

---

## களியாட்டவரிக் கட்டளைச் சட்டம்

(267 ஆம் அத்தியாயமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் குருநாகல் மாவட்டத்திலுள்ள மொறகொல்லகமைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால் அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தின் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக் கட்டணங்கள்மீது (267 ஆம் அத்தியாயமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ், இதன்கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின் படியான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றிற் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து இச்சபை இத்தால் விதித்து அறவிடுகின்றது.

### கட்டணத்தொகை

| வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம் | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| 20 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 50 சதத்க்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 5 |
| 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 10 |
| 1 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 15 |
| 1.50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 2 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. .. | 20 |
| 2.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 3 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. .. | 30 |
| 3.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 4 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. .. | 40 |
| 4.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 5 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. .. | 50 |
| 5.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 10 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. .. | 1.00 |
| 10.00 ரூபாவுக்கு மேற்படுமிடத்து | |
| 1. முதல் 10 ரூபாவுக்கு .. .. | 1.00 |
| 2. ஒவ்வொரு மேலதிக 5 ரூபாவுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 1.00 |

பீ. சிறீவர்த்தன,
மேலதிக நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 12 ந உ.

8–1045—28.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,921

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். *அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.*

**அட்டவணை— 1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | 7. 8.70 | வெள்ளி | 30. 7.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி | 7. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி | 14. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி | 21. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆு மார்ச்சு மீ 5 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.